**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 52/2022**
**Deposition of witness of Defendant – D.W.2(ராமசாமி)**
**23.7.2024**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**:

எனது பூர்வீக கிராமம் மாதுராப்பட்டி. நான் தேங்காய் வியாபாரம் செய்து வருகிறேன். என்னுடன் பிறந்தவர்கள் ஒரு அக்கா ஒரு தம்பி. பிரதிவாதி உமாமகேஸ்வரி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது மைத்துனரின் மனைவி. எனது நிரூபனவாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். தாவா சொத்து உமாமகேஸ்வரிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தை அவர் கிரையம் வாங்கியுள்ளார். வாதிக்கு நான் நேரடியாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் அனுப்பியுள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**